தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032.
தொலைபேசி எண்: 044–22201337.
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 350/ந/2025. நாள் 29.05.2026

திரு.S.அன்பழகன்,
துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

1)நகராட்சி ஆணையர்,
துறையூர் நகராட்சி, துறையூர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம் – எதிர்மனுதாரர்கள்

2)உரிமையாளர், ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி,
துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் அஞ்சல் & வட்டம், முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண்.155 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.S.அன்பழகன் என்பவரின் 04.10.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 08.10.2025 அன்று பெறப்பட்டு 350/ந/2025 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் அஞ்சல் & வட்டம், முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண்.155 என்ற முகவரியில் வசிக்கும் திரு.S.அன்பழகன் என்பவர் தனது 04.10.2025 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

" திருச்சி மாவட்டம், துறையூர் பெரிய கடைவீதியில் அதுவும் ஒரு வழிப்பாதை சாலையில் ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி மற்றும் MPM சிட்பண்ட்ஸ் அமைந்துள்ள கட்டிடம் மெயின் வாசல்படி அரசு கழிவுநீர் கால்வாயை மூடி அதன் மீது வாசல்படி வைத்ததோடு, கட்டிடத்தை சுற்றி நான்கு பக்கமும் காலி இடம் (set back) 1 அங்குலம் கூட விடாமலும், சுமார் 15 மீட்டர் உயரத்தில் 3 மாடி கட்டி வாடகைக்கு விடப்பட்டிருக்கும் சூழ்நிலையில் பார்க்கிங் வசதிக்கென்று 1 அங்குலம் கூட இடம் விடாமல் கட்டப்பட்டுள்ளது. எனவே விதி மீறிய ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி கட்டிடத்தை இடித்து அகற்றுமாறு பொதுநலன் கருதி நான் துறையூர் நகராட்சி ஆணையருக்கு 06.08.2025இல் புகார் அனுப்பி அதனை அவர் 13.08.2025இல் பெற்று கொண்டதாக எனக்கு ஒப்புதல் சான்று வந்துள்ளது. நகராட்சி ஆணையருக்கு அனுப்பிய புகாரின் நகலை நகராட்சி நிர்வாக இயக்குனர், மண்டல இயக்குனருக்கும் அனுப்பினேன்.

நான் நகராட்சி ஆணையருக்கு அனுப்பிய புகாரிலேயே Tamil Nadu Combined Development and Building Rules, 2019–ன்படி வரைபடத்தில் parking area and set back குறிப்பிட்டுதான், அனுமதி நகராட்சியால் வழங்கமுடியும் என்கிற சூழ்நிலையில் ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி கட்டிடம் நகராட்சியிடம் பார்க்கிங் வசதியின்றி செட்பேக் வசதியின்றி எப்படி கட்டிட

அனுமதி பெற்றது என்று எனக்கு அதிர்ச்சியை ஏற்படுத்துவதாகவும், ஒரு வேளை நகராட்சியிடம் உரிய அனுமதியின்றி இயங்கி வருகின்றதா என்ற எனது சந்தேகத்தை தெரிவித்திருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே நகராட்சி நிர்வாக இயக்குனரின் அறிவுறுத்தல்களை கடைப்பிடிக்காமல் விதிமீறிய ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி கட்டிடத்தை இதுவரை ஆய்வு செய்யாமல் ஆணையர்கள் இருந்ததிலிருந்து லஞ்சம் பெற்றிருப்பார்களோ என்கிற எனது சந்தேகத்தை தெரிவித்திருந்தேன்.

மேலும் நான் என் புகாரிலேயே மாண்புமிகு உயர்நீதிமன்றம் விதிமீறல் தொடர்பான அனைத்து வழக்குகளிலும் அதிகாரிகள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்று கூறியதை சுட்டிகாட்டியதோடு, விதிமீறல் கட்டிடங்களுக்கு ஆதரவாக இருந்த அதிகாரிகள் மீது நடவடிக்கைகள் எடுத்துள்ளதை சுட்டிகாட்டியதோடு, வரிவிதிப்பு முறையை சரியாக கடைப்பிடித்தாலே விதிமீறல்களை தடுத்து விடலாம் என்று கூறியதையும் சுட்டி காட்டி இருந்தேன். மேலும் அரசு அதிகாரிகளின் செயல்பாட்டை மிக உன்னிப்பாக கண்காணித்து வருவதாக குறிப்பிட்டுள்ளதையும் சுட்டி காட்டியதோடு பொதுமக்களின் புகார் மனு மீது நடவடிக்கை எடுக்காத I.A.S. ஆபிசருக்கு 1 மாதம் சிறைத்தண்டனையும், அபராதமும் மாண்புமிகு உயர்நீதிமன்றம் விதித்துள்ளதையும் சுட்டிகாட்டியதோடு அரசியல் சட்டத்தை அதிகாரிகள் மதித்து நடக்குமாறு அறிவுரை வழங்கியதையும் குறிப்பிட்டிருந்தேன்.

மேலும் நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே அனுமதியின்றி செயல்படும் கட்டுமானங்கள் மீது தேவையான நடவடிக்கைகளுக்காக மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவை இணைத்து நகராட்சி நிர்வாக இயக்குனர் அனுப்பிய கடிதத்தை பற்றியும் குறிப்பிட்டிருந்தேன். மேலும் உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற உத்தரவுகளை அறிந்தும் துறையூரில் திரும்பும் திசை எல்லாம் விதிமீறல் கட்டிடங்கள் இருப்பதை அறிந்தும் தாங்களே முன்வந்து உச்சநீதிமன்ற உத்தரவின் கீழ் விதிமீறல் கட்டிடங்களை அகற்றுவது ஆணையரின் தலையாய கடமை என்பதையும் சுட்டி காட்டி இருந்தேன்.

மேலும் நான் என் புகாரிலேயே ஆணையர் அவர்களின் உயர் அதிகாரிகளின் அறிவுரையை பின்பற்றாவிட்டாலும், அவரின் அதிகாரிகள் போல் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தையும், மாண்புமிகு உயர்நீதிமன்றத்தையும் ஏமாற்றி விடலாம் என்று கருதாமல், மாண்புமிகு உச்சநீதிமன்றத்தைவிடவும், மாண்புமிகு உயர்நீதிமன்றத்தைவிடவும் தன்னை சர்வ வல்லமை படைத்தவராக கருதும் போக்கை மாற்றி கொண்டு மாண்புமிகு உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம் இரண்டிற்கும் மரியாதையும், பயமும் கொண்டு சட்டப்படி மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் விதிமுறைகளை முற்றிலும் மீறி செயல்படும் ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி கட்டிடத்தை இடித்து அகற்றுமாறு கோரியிருந்தேன். மேலும் தலைமை செயலாளரின் அறிவுறுத்தல்படி 30 நாட்களுக்குள் என் புகார் மீது நடவடிக்கை எடுத்து அதன் விவரத்தை தெரிவிக்குமாறும், 30 நாட்களுக்குள் பதில் அளிக்காவிட்டால் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்வேன் என்பதையும் தெரிவித்திருந்தேன். எனவே நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே மேற்சொன்ன அனைத்து அம்சங்களையும் விளக்கியதோடு, தலைமை செயலாளரின் அறிவுறுத்தல்படி 30 நாட்களுக்குள் பதில் அளிக்காவிட்டால் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்வேன் என்று கூறியும் இதுவரை விதிமீறிய ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதிலிருந்து விதிமீறிய கட்டிடத்திற்கு ஆணையர் உடந்தையாக செயல்படுகின்றார் என்பது நன்கு விளங்குகின்றது.

எனவே இத்தகைய அசாதாரண சூழ்நிலையில் குற்றவாளியும், நீதிபதியும் எப்படி ஒருவராக இருக்க முடியாதோ அதுபோல் ஆணையர் கொடுக்கும் வாக்குமூலம், அறிக்கை அனைத்தும் ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி உரிமையாளருக்கு சாதகமாக கொடுப்பதோடு, எப்படியும், எப்பாடுபட்டாவது விதிமீறிய ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி கட்டிடத்தை காப்பாற்றிவிடுவார் என்று நான் கருதுவதால் உயர்நீதிமன்றம் போன்ற சத்தியத்தின் வழியில்

நேர்மையாக நீதிவழங்கும் தாங்கள் துறையூரில் உள்ள ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி கட்டிடத்தை நேராய்வு செய்து அந்த கட்டிடம் Tamil Nadu Combined Development and Building Rules 2019–ன்படி கட்டப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்து, கட்டிட வரைபடத்தில் உள்ளபடி கட்டிடம் கட்டப்பட்டு நகராட்சியால் கட்டிட நிறைவு சான்று வழங்கப்பட்டதா என்பதை கண்டறிந்து விதிமீறி செயல்படும் ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி கட்டிடத்தை மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவுப்படி இடித்து அகற்றுமாறு தாழ்மையுடன், பணிவுடன், வேண்டி, விரும்பி கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 17.10.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் துறையூர் நகராட்சி ஆணையரிடம் அறிக்கை கோரப்பட்டது.

3. துறையூர் நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.3894/2025/எப்1, நாள் 29.01.2026–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"விசாரணையில் மேற்படி ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி நிறுவனம் சுமார் 10 ஆண்டுகளாக துறையூரில் இயங்கி வருவதாக தெரிய வருகிறது. தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் ஆகியவற்றில் தலா 1467.5 சதுர அடி பரப்பளவில் RCC கட்டிடம் அமையப்பெற்ற ஜுவல்லரி ஷாப் இயங்கி வருகிறது. மூன்றாம் தளத்தில் 910.875 சதுர அடி பரப்பளவில் RCC Building அமையப்பெற்ற குடோன் இயங்கி வருகிறது. மேலும் 692.25 சதுர அடியில் Tinsheet roof area அமைந்துள்து. கட்டுமானத்தின் மொத்த பரப்பளவு 6075 சதுரடியாகும். தரைத்தளம், முதல் தளம், இரண்டாம் தளம் ஆகியவற்றில் மொத்தம் 3912 சதுர அடி அனுமதி பெறப்பட்டுள்ளது. மூன்றாம் தளம் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது. பார்க்கிங் வசதி இல்லை. முன்பக்க, பின்பக்க திறவிடங்கள் எதுவும் இல்லை.

மேற்படி 09.12.2025 அன்று கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ள விவரம், சொத்துவரி விதிப்பு விவரம், குடிநீர் குழாய் இணைப்பு விவரம் உள்ளிட்ட அனைத்து ஆவணங்களையும் மூன்று தினங்களுக்குள் நகராட்சியில் சமர்ப்பிக்குமாறு தெரிவித்து அதன் உரிமையாளருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. இந்நாள் வரை எவ்வித ஆவணங்களையும் உரிமையாளர் நகராட்சியில் வழங்கவில்லை. ஆகவே உரிமையாளருக்கு ஆவணங்களை சமர்ப்பிக்க மறு அறிவிப்பு கடிதம் 19.12.2025 அன்று அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆக்கிரமிப்பு தொடர்பாக நில அளவீடு செய்து தருமாறு வட்டாட்சியருக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. வட்டாட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்".

4. மனுதாரர், எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையர் மற்றும் 2–ம் எதிர்மனுதாரரான ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி உரிமையாளர் ஆகியோரை 24.02.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு 09.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரின் 09.02.2026 நாளிட்ட கடிதத்தில் 21.02.2026 அன்று தனது 70வது திருமண நிகழ்ச்சி (பீமரதசாந்தி) நடைபெற உள்ளதால் 24.02.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராக இயலாததால், மேற்படி விசாரணையை 1 மாதம் தள்ளி வைத்து வேறொரு தேதிக்கு மாற்றி தருமாறு கோரியுள்ளார்.

6) மனுதாரரின் கோரிக்கையினை ஏற்று 24.03.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 11.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் மனுதாரர், எதிர்மனுதாரர் மற்றும் 2–ம் எதிர்மனுதாரர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டது.

7) மனுதாரர் 24.03.2026 அன்று விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்துள்ளார்.

"திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூரில் பெரிய கடை வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி கட்டிடம் மற்றும் MPM சிட்பண்ட்ஸ் அமைந்துள்ள கட்டிடம் அரசு கழிவுநீர் கால்வாயை மூடி 15 மீட்டர் உயரத்தில் விதிமுறைகளை மீறி 3 மாடி கட்டிடம் பார்க்கிங் வசதிக்கென்று 1 அங்குலம் கூட விடாமல் கட்டப்பட்டுள்ளதால், அரசு விதிகளின்படி அகற்றி அப்புறப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் 24.03.2026 நாளிட்ட எனது எழுத்துப்பூர்வ வாக்குமூலம் மற்றும் அறிக்கையினை எனது கூடுதல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி பணிவுடன் இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

8) மனுதாரர் 24.03.2026—ல் எழுத்து மூலம் அளித்த வாக்குமூலத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"திருச்சி மாவட்டம், துறையூர் பெரிய கடை வீதியில் அதுவும் ஒரு வழிப்பாதை சாலையில் ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி மற்றும் MPM சிட்பண்ட்ஸ் உள்ள கட்டிடம் மெயின் வாசல்படி அரசு கழிவுநீர் கால்வாயை மூடி அதன் மீது வாசல்படி வைத்ததோடு, கட்டிடத்தை சுற்றி நான்கு பக்கமும் காலி இடம் (set back) 1 அங்குலம் கூட விடாமலும் சுமார் 15 மீட்டர் உயரத்தில் 3 மாடி கட்டி வாடகைக்கு விடப்பட்டிருக்கும் சூழ்நிலையில் பார்க்கிங் வசதிக்கென்று 1 அங்குலம் கூட இடம் விடாமல் கட்டப்பட்டுள்ளது.

எனவே, விதிமீறிய ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி கட்டிடத்தை மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவின்கீழ் இடித்து அகற்றுமாறு நான் துறையூர் நகராட்சி ஆணையருக்கு அளித்த புகார் மீது நடவடிக்கை எடுக்க தவறிய ஆணையர் மீது நடவடிக்கை எடுத்து உயர்நீதிமன்றம் போன்று சத்தியத்தின் வழியில் நேர்மையாக நீதி வழங்கும் தாங்கள் துறையூரில் உள்ள ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி கட்டிடத்தை இட நேராய்வு செய்து விதிமீறிய ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி கட்டிடத்தை மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவின் கீழ் இடித்து அகற்றுமாறு பணிவுடன் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் துறையூர் நகராட்சி ஆணையர் விதி மீறிய ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி உரிமையாளருக்கு உடந்தை என்று நான் கருதுவதால், தொடர்ந்து ஆணையரே என் புகாரை விசாரிப்பது இயற்கை நீதிக்கு புறம்பாக இருக்கும் என்று நான் கருதுவதாலும், மேலும் ஒரு விசாரணை அதிகாரி மீது சந்தேகம் ஏற்படுவதாக புகார்தாரர் கூறினால் தொடர்ந்து அவரே விசாரிப்பது அரசியல் அமைப்பு சட்டத்திற்கு விரோதமாக அமைவதோடு, சட்டத்திற்கு விரோதமான செயல் என்று மாண்புமிகு உச்சநீதிமன்றம், மாண்புமிகு உயர்நீதிமன்றம் பல்வேறு வழக்குகளில் விசாரணை அதிகாரியை மாற்றியதுபோல் மாண்புமிகு தங்களின் நேரடிபார்வையில் விசாரித்து நியாயமான நீதி வழங்குமாறு தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சமீபத்தில் சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வில் நடந்த CMP No.4315/2026 வழக்கில் சென்னை மாநகராட்சி அதிகாரிகள் கோப்பு தொலைந்துவிட்டது என்று கூறியதற்கு இதுபோதுமான காரணம் இல்லை என்றும், அரசு அலுவலகங்கள் கோப்பு சுற்றுமுறை என்று சொல்லி தப்பிக்க முடியாது என்றும் இது எதிர்தரப்புடன் சேர்ந்து கூட்டுச்சதியாக கூட இருக்கலாம் என்றும் உச்சநீதிமன்றம் ஏற்கனவே பல தீர்ப்புகளில் தெளிவாக கூறியதாக கூறி இந்த வழக்கை விஜிலென்ஸ் துறை விசாரித்து உண்மையை கண்டறிய வேண்டும் என்று 20.02.2026–ல் உத்தரவு பிறப்பித்து உத்தரவின் நகல் தலைமைச்செயலாளருக்கு உயர்நீதிமன்றம் அனுப்பி உள்ளது.

ஏற்கனவே மாாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் நடந்த 8 வழக்குகளில் 7 வழக்கில் ஆவணம் இல்லை என்று துறையூர் நகராட்சி ஆணையர் அறிக்கை அளித்துள்ளதாலும், நகரமைப்பு ஆய்வாளர் ஆவணம் இல்லை என்று நேரில் ஆஜராகி வாக்குமூலம் கொடுத்துள்ளதாலும், இந்த வழக்கிலும் ஆவணம் இல்லை என்று கூறினால் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

9) மேற்கண்ட எழுத்துப்பூர்வ வாக்குமூலத்தை தொடர்ந்து மனுதாரர் தனது 24.03.2026 நாளிட்ட அறிக்கையை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார். அதில் –

“திருச்சி மாவட்டம், துறையூர் பெரிய கடை வீதியில் ஒருவழிப்பாதையில் ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி மற்றும் MPM சிட்பன்ட்ஸ் உள்ள கட்டிடம் மெயின் வாசல்படி அரசு கழிவுநீர் கால்வாயை மூடி அதன் மீது வாசல்படி வைத்ததோடு, கட்டிடத்தை சுற்றி நான்கு பக்கமும் காலி இடம் (set back) 1 அங்குலம் கூட விடாமலும் சுமார் 15 மீட்டர் உயரத்தில் 3 மாடி கட்டி வாடகைக்கு விடப்பட்டிருக்கும் சூழ்நிலையில் பார்க்கிங் வசதிக்கென்று 1 அங்குலம் கூட இடம் விடாமல் TNCDBR 2019க்கு விரோதமாக கட்டப்பட்டுள்ளது.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே நகராட்சி நிர்வாக இயக்குநரின் அறிவுறுத்தல்களை பின்பற்றி ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி கட்டிடத்தை இதுவரை ஆய்வு செய்யாமல் இருப்பதிலிருந்து ஆணையர்கள் லஞ்சம் பெற்றிருப்பார்களோ என்ற எனது சந்தேகத்தை தெரிவித்ததோடு, ஆணையர் அவரின் உயர் அதிகாரிகளின் உத்தரவை மதிக்காவிட்டாலும் மாண்புமிகு உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம் இரண்டையும் ஏமாற்றி விடலாம் என்று கருதாமல் மாண்புமிகு உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம் இரண்டையும் விட தன்னை சர்வ வல்லமை படைத்தவராக கருதும்போக்கை மாற்றிக்கொண்டு உச்சநீதிமன்ற உத்தரவின் கீழ் விதிமீறி செயல்படும் ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி கட்டிடத்தை இடித்து அகற்றுமாறு கோரியதோடு, அரசு அதிகாரிகளின் செயல்பாட்டை உயர்நீதிமன்றம் மிக உன்னிப்பாக கண்காணித்து வருவதை குறிப்பிட்டதோடு, கடமை தவறிய I.A.S. ஆபிசருக்கு சிறைத்தண்டனை, அபராதம் விதித்த உயர்நீதிமன்ற உத்தரவை சுட்டி காட்டிய பின்பும் உயர்நீதிமன்றத்திற்கே சவால் விடும் விதமாக இதுவரை ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி கட்டிடத்தின் மீது ஆணையர் நடவடிக்கை எடுக்காத காரணத்தால் அவரின் அறிக்கை, வாக்குமூலம் அனைத்தும் ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி கட்டிட நிர்வாகிக்கு சாதகமாக இருக்கும்.

எனவே உயர்நீதிமன்றம் போன்று சத்தியத்தின் வழியில் நேர்மையாக நீதிவழங்கும் தாங்கள் ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி கட்டிடத்தை இட நேராய்வு செய்து TNCDBR 2019ன்படி கட்டப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்து கட்டிட வரைபடத்தில் உள்ளபடி கட்டிடம் கட்டப்பட்டு நகராட்சியால் கட்டிட நிறைவுச்சான்று வழங்கப்பட்டதா என்பதை ஆய்வு செய்யவும், ஏற்கனவே உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் நடந்த 8 வழக்குகளிலும் நான் புகார் கொடுத்ததற்கு பின்பு பார்க்கிங் இடம் வாங்கி உள்ளதாக அனைத்து கட்டிடகாரர்களும் இந்த முறைமன்றத்தில் பொய்யாக கூறி உள்ளதாலும், கட்டிடகாரர்களுக்கு சாதகமாக பார்க்கிங் இடம் வாங்கி உள்ளதாக ஆணையரும் பொய்யாக கூறி உள்ளதால் இந்த வழக்கிலும் பார்க்கிங் இடம் புதிதாக வாங்கியதாக கூறினால் பார்க்கிங் இடம் வாங்கியதற்கான இடத்தின் ஆவணத்தை நகராட்சியில் பதிவு செய்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளதா என்பதையும், பார்க்கிங் இடம் வாங்கியதற்கான இடத்தின் ஆவணத்தை முறைமன்றத்தில் தாக்கல் செய்ய சொல்லி அதனை தாங்கள் உத்தரவில் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மேலும் உள்ளாட்சி அதிகார வணிக உபயோக கட்டிட வரம்பு (தரைத்தளம் + முதல் தளம்) 2000 சதுர அடி என்று விதி உருவாக்கப்பட்டுள்ளதால் ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி கட்டிடம் உள்ளாட்சி அதிகார வணிக உபயோக கட்டிட வரம்பு விதிப்படி கட்டப்பட்டுள்ளதா என்பதை தெரிவிக்கவும்.

மேலும் ஏற்கனவே உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் நடந்த 8 வழக்குகளில் 7 வழக்குகளில் கட்டிட அனுமதி பெறப்பட்ட ஆவணம் நகராட்சியிடம் இல்லை என்று தொடர்ந்து கூறி வருவதால் ஆவணம் இல்லை என்று கூறியதற்காக கல்வித்துறை இயக்குனருக்கு ரூ.50 லட்சம் உயர்நீதிமன்றம் அபராதம் விதித்ததையும் ஆவணம் தொலைந்துவிட்டது என்று கூறிய வழக்கில் உயர்நீதிமன்றம் விஜிலென்ஸ் விசாரணைக்கு உத்தரவு பிறப்பித்ததையும் கவனத்தில் கொண்டு இந்த வழக்கிலும் ஆவணம் இல்லை என்று கூறினால் உயர்நீதிமன்ற உத்தரவின்கீழ் துறையூர் நகராட்சி ஆணையர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனவே மதிப்புமிக்க தங்களது விசாரணையில் ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி கட்டிடம் விதிமீறி கட்டப்பட்டுள்ளது கண்டறியப்பட்டால் மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவு 12199–12200 நாள் 30.04.2025ன்படி இடித்து அகற்றுமாறும் நான் புகாரில் கூறியது பொய் என்றால் என் மீது எடுக்கும் நடவடிக்கையை நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன் என்பதை பணிவோடு, தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

10) எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையர் தனது 23.03.2026 நாளிட்ட கடிதம் ந.க.எண்.3894/எப்1/2025–ல் தான் துறையூர் நகராட்சியில் ஆணையராகவும், பெரம்பலூர் நகராட்சி ஆணையர் (கூபொ) ஆகவும் பணிபுரிந்து வருவதாலும், சட்டமன்ற தேர்தல் நடைபெறவுள்ளதை முன்னிட்டு அனைத்து வாக்குச்சாவடி தொடர்பாக ஆய்வு பணிகள் மேற்கொள்ள உள்ளதாலும் இரண்டு நகராட்சிகளிலும் வரி வசூல் தொய்வு நிலையுள்ளதால் அதனை ஆய்வு செய்ய உள்ளதாலும், 24.03.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராக இயலாத நிலை உள்ளதால், ஆணையருக்கு பதிலாக நகராட்சியில் நகரமைப்பு ஆய்வராக பணிபுரிந்து வரும் திருமதி.த.தவமணி என்பவர் உரிய கோப்புகளுடன் வந்து விளக்கம் அளிக்க அனுமதி கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் துறையூர் நகராட்சி நகரமைப்பு ஆய்வர் 24.03.2026 அன்று விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி 10 ஆண்டுகளாக துறையூரில் இயங்கி வருகிறது. அதில் தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் ஆகியவற்றில் RCC கட்டிடத்தில் ஜுவல்லரி ஷாப் இயங்கி வருகிறது. மூன்றாம் தளத்தில் RCC building–ல் குடோன் இயங்கி வருகிறது. மேலும் Tinsheet roof area அமைந்துள்ளது.

மூன்றாம் தளம் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது. வாகனம் நிறுத்துவதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. நகராட்சி ஆணையர் ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி உரிமையாளருக்கு 09.12.2025 நாளிட்ட கடிதத்தின் மூலம் 1998–ம் வருடத்திய தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) 133(5) மற்றும் 135(1) பிரிவின் கீழ் கட்டிட அனுமதி பெற்ற விவரம், சொத்து வரி குடிநீர் இணைப்பு குறித்த ஆவணங்களை சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்பட்டு கட்டிட உரிமையாளர் ஆவணங்களை சமர்ப்பிக்காததால் மீண்டும் 19.12.2025 நாளிட்ட அறிவிப்பு அனுப்பி தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என இம்முறைமன்ற நடுவத்தில் பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

11) 2–ம் எதிர்மனுதாரரான துறையூர் ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி கட்டிட உரிமையாளர் 24.03.2026 அன்று விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

எங்களது கட்டிடம் முறையாக கடந்த 2015–2016ம் வருடம் துறையூர் நகராட்சியிடமிருந்து கீழ்க்கண்ட விவரப்படி கட்டிட வரைபட அனுமதி பெற்று கட்டப்பட்டுள்ளது.

வரைபட அனுமதி எண்.27/2015 நாள் 26.02.2015

| | |
|---|---|
| வீட்டு உபயோக கட்டிடம் | 1958 சதுர அடி. |
| வணிக உபயோக கட்டிடம் | 1955 சதுர அடி. |

எங்களது நிறுவனத்திற்கு வரும் வாடிக்கையாளர்களின் வாகனத்தை நிறுத்துவதற்கென பார்க்கிங் வசதி செய்து தரப்பட்டுள்ளது. போக்குவரத்திற்கோ, பொதுமக்களுக்கோ எந்தவித இடைஞ்சலும் இல்லாமல் வசதி செய்து தரப்பட்டுள்ளது. மேலும் எங்களது கட்டிடத்தில் விதிமீறல்கள் எதுவும் இல்லை.

ஏதாவது விதிமீறல்கள் இருக்கும்பட்சத்தில் அதனை நாங்கள் தமிழ்நாடு அரசு விதிகள் மற்றும் நகராட்சி விதிகளுக்கு உட்பட்டு வரன்முறை செய்து கொள்ள தயாராக இருக்கிறோம்.

எங்களது கட்டிடத்தை வரன்முறை செய்து கொள்வதற்காக நாங்கள் தமிழ்நாடு டவுன் அன்ட் கன்ட்ரி பிளானிங் ஆக்ட், 1971 பிரிவு 80 A–ன்படி அரசுக்கு மேல் முறையீடு செய்துள்ளோம். அதற்கான அனுப்புகை சீட்டு (Speed post acknowledgement) பெற்றுள்ளோம். அதன் நகலை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் மூன்றாம் தளத்திற்கு அனுமதிக்கு வரைபடம் நகராட்சிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. முறையான கட்டணம் செலுத்தப்பட்டு, அதற்கான ஆதார ஆவணம் இத்துடன் இணைத்திருக்கிறேன்.”

மேற்கண்ட விவரங்களை இம்முறைமன்ற நடுவத்தின் முன் பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

12) மனுதாரரின் மனு, வாக்குமூலம், விசாரணையில் அளித்த எழுத்துப்பூர்வ அறிக்கை, முதல் எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி நகரமைப்பு ஆய்வரின் வாக்குமூலம், இரண்டாம் எதிர்மனுதாரரான ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி கட்டிட உரிமையாளரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

திருச்சி மாவட்டம் துறையூரில், பெரிய கடை வீதியில் ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி, MPM சிட்பன்ட்ஸ் கட்டிடம் விதி மீறி கட்டப்பட்டுள்ளதால் அந்த கட்டிடத்தை மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவின் கீழ் இடித்து அகற்றுமாறு பொதுநலன் கருதி புகார் அளித்தும், நடவடிக்கை எடுக்காமல் இருக்கும் துறையூர் நகராட்சி ஆணையர் மீது நடவடிக்கை எடுத்து விதிமீறி கட்டப்பட்டுள்ள ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி கட்டிடத்தை இடித்து அகற்ற மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார்.

ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி நிறுவனம் சுமார் 10 ஆண்டுகளாக துறையூரில் இயங்கி வருவதாக தெரிய வருகிறது எனவும், தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் ஆகியவற்றில் தலா 1467.5 சதுர அடி பரப்பளவில் கட்டிடம் அமையப்பெற்ற ஜுவல்லரி ஷாப் இயங்கி வருகிறது என்பதும், மூன்றாம் தளத்தில் 910.875 சதுர அடி பரப்பளவில் RCC Building அமையப்பெற்ற குடோன் இயங்கி வருகிறது என்பதும், 692.25 சதுர அடியில் Tinsheet roof area அமைந்துள்ளது என்பதும், கட்டுமானத்தின் மொத்த பரப்பளவு 6075 சதுர அடி என்பதும், தரைத்தளம், முதல் தளம், இரண்டாம் தளம் ஆகியவற்றில் மொத்தம் 3912 சதுர அடி அனுமதி பெறப்பட்டுள்ளது என்பதும், மூன்றாம் தளம் அனுமதியின்றி கட்டப்பட்டு, பார்க்கிங் வசதி இல்லாமலும், முன்பக்க, பின்பக்க திறவிடங்கள் எதுவும் இல்லாமலும் கட்டப்பட்டுள்ளது என்பதும், ஆக்கிரமிப்பு தொடர்பாக நில அளவீடு செய்து தருமாறு வட்டாட்சியருக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது என்பதும், வட்டாட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதும், ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி உரிமையாளருக்கு 09.12.2025 நாளிட்ட கடிதத்தின் மூலம் 1998ம் வருடத்திய தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் (திருத்தப்பட்ட சட்டம் 35/2022)பிரிவு 133(5) 135(1)ன் கீழ் கட்டிட அனுமதி பெற்ற விவரம், சொத்துவரி, குடிநீர் இணைப்பு குறித்த ஆவணங்களை சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்பட்டு கட்டிட உரிமையாளர் ஆவணங்களை சமர்ப்பிக்காததால் மீண்டும் 19.12.2025 நாளிட்ட அறிவிப்பு அனுப்பி தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதும் துறையூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகரமைப்பு ஆய்வரின் வாக்குமூலம் ஆகியவற்றிலிருந்து அறிய முடிகிறது.

இந்நிலையில் ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி கட்டிட உரிமையாளர் தங்களது கட்டிடத்தினை வரன்முறை செய்து கொள்ள Tamil Nadu Town and Country Planning Act, 1971, பிரிவு 80A–ன்படி அரசுக்கு மேல்முறையீடு செய்துள்ளதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதை, துறையூர் நகராட்சி ஆணையர் உறுதி செய்து அதனடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி துறையூர் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு, மே 29–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.S.அன்பழகன்,
   எண்.155, அசோக் நகர்,
   முசிறி மெயின் ரோடு,
   துறையூர் அஞ்சல் & வட்டம்.
   திருச்சிராப்பள்ளி மாவட்டம்–621 010.
2. நகராட்சி ஆணையர்,
   துறையூர் நகராட்சி, துறையூர்.
   திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
3. கட்டிட உரிமையாளர்,
   ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி,
   பெரிய கடை வீதி, துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி. நகர், சென்னை – 600 028.
5. இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர்,
   சென்னை – 600 028.

நகல்:
மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.